சிவமயம்

Registered as a News-paper in Ceylon
P. M. G. NO. H. A 89/300 of 1939.

# இந்துசாதனம்

ரோத வருடம் (1889) ஆவணமாதம் 28-ந்உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே

புத். ருஅ] யாழ்ப்பாணம்—விய ஆனு பங்குனிமீ க உ (1947 மார்ச் 14 வெள்ளிக்கிழமை) [இல கூச

94

# அன்புநெறிச் செல்வர்

## அப்பரும் ஆளுடைய வள்ளலும்

(M. பாலசுப்பிரமணிய முதலியார் B. A., B. L., அவர்கள், 'ஞானசம்பந்த"த்தில் எழுதுகிறார்)

இப்போது மோட்டார் கார்களில் விரைந்து செல்லும் தகுதியுடையார் நிலையில் இருந்த செல்வர்கள், மிகப் பழைய காலத்திலிருந்து- சென்ற எண்பது அல்லது நூறாண்டுகட்கு முன்புவரையில் - பல்லக்கு மேனா என்ற பலவகைப் பெயருடைய சிவிகையில்தான் ஏறிச் சென்றார்கள். அச் சிவிகைகளில் ஏறிச் செல்வோரையும், அவர்களைச் சிவிகைகளில் தாங்கிச் செல்வோரையும் பார்த்தார் திருவள்ளுவர். உடனே அவருக்கு ஒரு நல்ல கருத்துத் தோன்றியது. "சிவிகையின் உள்ளே உட்கார்ந்திருப்பவனும மனிதனே; அவனைத் தூக்கிச் செல்வோரும் மனிதர்களே; ஆ! ஆ!! இது என்ன மனிதனுக்கு மனிதன் வித்தியாசம்! புறத்தோற்றத்தில் இவர்களுக்குள் ஒரு வித்தியாசமும் காணோமே! எல்லோரும் ஒரு தலை, இரண்டு கண், இரண்டு கை, இரண்டு கால் உடையவர்களாகத்தானே இருக்கிறார்கள்! பின் ஏன் ஒருவர் சிவிகையில் உட்காரவும், மற்றவர்கள் அவரைத் தூக்கவும் காண்கிறேன்? ஓ! ஓ!! நல்வினையின் மிகுதி இவரைச் சிவிகையின் உள்ளே உட்காரவைத்தது; தீவினையின் திரட்சி இவர்களைச் சிவிகை சுமக்கும்படி வைத்ததுபோலும்! கண்டேன்! கண்டேன்! இருவினைப் பயனைக் கண்கூடாகவே கண்டேன்! இதற்கு ஆகமப் பிரமாணமும் அனுமானப் பிரமாணமும் வேண்டாம், காட்சிப் பிரமாணமே போதும்" என்ற எண்ணங்கள் வள்ளுவர் மனத்தில் உதித்தன. இவ்வெண்ணங்கள் திரண்டு,

"அறத்தாறு இதுஎன வேண்டா
சிவிகை
பொறுத்தானோடு ஊர்ந்தானிடை"

என்ற குறளாக உருவெடுத்தன.

இனி, இன்னொரு பெரியார் தமது மனக்கண்ணினால் கண்ட மற்றொரு சிவிகையைப் பார்ப்போம, அச்சிவிகை, நடுநாட்டிலுள்ள திருநெல்வாயில் அரத்துறை ஈசன் தந்தருளிய முத்துச் சிவிகை. அச் சிவிகையில் ஊர்ந்து சென்றவர் பரசமய கோளரியாகிய பாலறாவாயர், அவர் முதன்முதலில். அச் சிவிகையில் ஏறிய சிறப்பைச் சேக்கிழார்பெருமான், 'ஆதியார் அருள் ஆதலில், அஞ்செழுத்தோதி ஏறினார் உய்ய உலகெலாம" என்று வாயாரப் புகழ்கின்றார். இறைவனுடைய திருவருளாற் கிடைத்த சிவிகையைத் தாங்குவதற்கு எவ்வளவு புண்ணியம் ஒருவர் செய்தல் வேண்டும்? அதிலேயும் திருஞானசம்பந்தரை உள்ளே இருக்கச் செய்து அச்சிவிகையைத் தாங்கும்பேறு கிடைத்தற்கு, மேற்கண்ட புண்ணியத்தைவிடக் கோடி மடங்கு அதிகமான புண்ணியம் வேண்டாமா? என்று எண்ணினார் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள், உடனே அவருக்குத் திருக்குறள் கூறிய பொது நீதிக்கு இது ஒரு புறனடை என்ற கருத்துத் தோன்றியது. திருஞானசம்பந்தர் சிவிகையைத் தாங்குபவர்கள் தீவினையாளர் என்றுஎண்ண முடியுமா? தாங்கும் பேறு பெறாதவர்கள் அல்லவா தீவினையாளர்கள்? அச்சிவிகையைத் தாங்கிய புண்ணியவான்கள், தேவலோகத்தில் வேறு ஒருவராலும்தாங்கப்படாமல், ஆகாய விமானம்போல், தானாகச் செல்லும் சிவிகையில் ஊர்ந்து செல்லும் பேறல்லவோ பெற்றிருத்தல் வேண்டும் என்று எண்ணினார். எண்ணிய வண்ணம் எழுதிவைத்தார் நால்வர் நான்மணிமாலையில், (33-வது செய்யுள்) அச்செய்யுள் வருமாறு:-

"அறத்தா(று) இதுஎன வேண்டா
சிவிகை
பொறுத்தானோ(டு) ஊர்ந்தா
னிடையை—மறுத்தார்சம்
பந்தன் சிவிகை பரித்தார் திரிகுவர்
மற்(று)
உந்தும் சிவிகையினை ஊர்ந்து"

முக்கண் முதலோன் முத்தன் நல்கிய முத்துச் சிவிகையில், பத்தன் ஞானசம்பந்தனை நித்தம் தாங்கும் பெத்தர் பெற்ற பேறே இத்தகையது எனில், அத்தராம் முத்தராம் அப்பர் தாங்கிய சிறப்புச் செய்தியை என்னென்பது? இச் சிறப்பினைப் புகழ்ந்து கூறக் குன்றை முனியே வல்லுநர். அவர் திருவாக்கினை அடியொற்றியே சென்று காண்போம். திருமறைக்காட்டில் அப்பரிடம் விடைபெற்றுப் பாண்டிநாடு சென்ற புகலிவேந்தர், அந்நாட்டில் அமணிருள்போக்கித் திருநீற்றின் ஒளிபெருக்கி, மிக வெற்றிகரமாகத் திரும்பி வரும்போது, பல தலங்களைத் தரிசித்துக்கொண்டு திருக்கடவூர் சேர்ந்தார். அத்திருத் தலத்தில் "கூற்றுதைத்தார் குரைகழல்கள் பணிந்தேத்தி மன்னி அமர்ந்துறையும்" நாளில், "வாகீசமா முனிவர் எந் நகரில் எழுந்தருளிற்றென்றடியார்தமை" வினவினார். படர்க்கையில் வைத்துக் கூறுமிடத்திலும் அப்பர் சுவாமிகளை எவ்வளவு மரியாதையாகச் சம்பந்தர் குறிக்கிறார் என்பதை ஆழ்ந்து நோக்கி இன்புறுவோமாக.

ஆண்ட அரசு திருப்பூந்துருத்தியில் நித்தியவாசம் செய்து திருத்தொண்டு புரிகிற விவரங்களை யெல்லாம் அடியார்கள் தெரிவித்தார்கள். இதைக் கேட்டவுடன் "ஆண்ட அரசினைக்காணும் ஒப்பரிய பெருவிருப்பு மிக்கோங்க" ஞானசம்பந்தர் பல தொண்டர்களோடு கூட காவிரியாற்றின் தென்கரையிலே யாத்திரை செய்து "நாவரசர்உழைச் சண்பை நகர் அரசர் நண்ணுவார்" ஆயினார்.

சம்பந்தர் தம்மைக்காண வருகி

தொடர்ச்சி [illegible] பக்கம்

# ஆசிய மகாநாடு

## காட்சிச்சாலை ஏற்பாடு

இந்த மாதக் கடைசியில் டில்லியில் ஆசியா தேசத்தவர் மகாநாட்டுடன் ஒரு காட்சிச்சாலை நடத்தவும் மும்முரமான ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. இந்தியாவின் அபூர்வக் கலைகள் சங்கத்தார் உலக விவகார இந்தியக் கழகத்தார் ஒத்துழைப்புடன் தீவிர முயற்சி எடுத்துள்ளார்கள்.

ஆசியாதேசத்தவர் உறவு மகாநாட்டை மார்ச் மாதம் 23-ந் திகதி மத்திய அரசாங்க கல்வி மந்திரி மௌலானா அபுல்கலாம் ஆஸாத் திறந்து வைப்பார்

நேபாளம், இலங்கை, திபேத்து சீனா, இந்தோனேஷியா, ஆப்கானிஸ்தானம், ஈரான், பாலஸ்தீனம், ஸிரியா பர்மா, மலேயா, முதலிய நாடுகளி லிருந்தும் சித்திரங்கள், முதலியவற்றைப் பெற ஏற்பாடாயிருக்கிறது. சுமார் 100 படங்களுக்கு மேலாகக் கிடைக்குமென்று நம்பப்படுகிறது.

இந்தியாவில் முகலாய. ராஜபுத்திரர் காலத்திய சித்திரங்கள்சம்பந்தமானசுமார் 200படங்கள்வரைகாட்சியில் வைக்கப்படும் இந்தியக்கலை காலத்துக்குத் தக்கபடி எப்படி வளர்ந்து வருகிறதென்பதைக் காண்பிக்கவே இந்த ஏற்பாடு.

பழைய காலத்தில் இந்தியாதான் கலைகளுக்கு மத்திய இடமாயிருந்தது. இந்தக் கலைக்காட்சி பழைய காலத்திய தொடர்பை ஏற்படுத்துவற்கு முதல் முயற்சியாகும்.

# பிரிட்டிஷ் உதவி

## பிரான்சிய ஏகாதிபத்திய வெறி

இந்தோசீனத்தில் உள்ள தேசிய அரசாங்கத்தை நசுக்குவதில் இங்கிலாந்து பிரான்சிய அரசாங்கத்துக்குப் பலவிதத்திலும் உதவி செய்து வருகிறது. கடந்த 16 மாத காலத்துக்குள்ளும் 1 கோடி 75 லட்சம் பவுண்பெறுமதியான யுத்தப்பொருள்கள் பிரான்சியப் படைகளின் தேவைக்காக நேரே இந்தோசீனத்துக்கு இங்கிலாந்தினால் அனுப்பப்பெற்றுள்ளன.

இதனைவிட, 17 லட்சத்து 60 ஆயிரம் பவுண் பெறுமதியான ஆயுதங்கள் இனியும் அனுப்ப இங்கிலாந்துக்கும் பிரான்சுக்குமிடையே ஓர் ஒப்பந்தம் ஏற்பாடாகியிருக்கிறது.

92 யுத்தக் கப்பல்களை இங்கிலாந்திடம் இருந்து பெற பிரான்ஸ் ஓர் திட்டம் வகுத்திருக்கிறது.

தன்னுடைய ஏகாதிபத்தியத்தை ஒவ்வொன்றாக இழந்துவரும் இங்கிலாந்து, பிரான்சின் ஏகாதிபத்திய ஆசையை நிறைவேற்றுவதில் முனைந்து நிற்பது வேடிக்கைதான்.

# ஆங்கிலரின் மனமாற்றம்

## அதிகார முறை நீங்கி, சகோதரத்துவம்

இதுகாறும், இந்தியா கேவலம் ஓர் கீழ்த்தரமான, அடிமைகள் நிறைந்த ஓர் பெரிய கண்டம். அதனை அடக்கியாளவே தாம் இப்பூவுலகத்தில் அவதாரம் செய்தது என்று ஓர் அபிப்பிராயம் பிரிட்டிஷாரிடம் இருந்துவந்தது. அந்தவிதமான அபிப்பிராயம் இப்போது மறைந்து, இந்தியரும் தங்களைப்போல மனிதர்தான் என்ற ஓர் மனோபாவம் ஆங்கிலர்க்கிடையே உருவாகிவருகிறது என்று வங்காளத்தைச் சேர்ந்த ஸ்ரீமதிபத்மினிசென்குப்தாஇங்கிலாந்திற்பிரசுரமாகும்மான்செஸ்டர் கார்டியன் பத்திரிகையில் எழுதுகிறார். ஸ்ரீமதி சென்குப்தா மேலும் கூறுவதாவது:

"இக்காலத்தில், இந்தியாவுக்கு உத்தியோகார்த்தமாக வரும் ஆங்கில வாலிபர் பழைய கொள்கைகள் இல்லாதவர்களாக, இந்திய மக்களும் தங்களின் சகோதரர்தான் என்றபரந்த மனோபாவத்துடன் வந்து கருமமாற்றுகிறார்கள். இதன் பயனாக. மேல் நாடுகளுக்கும், கீழ் நாடுகளுக்குமிடையே நேசபான்மை அதிகமாகின்றது,

"இப்போது இந்தியாவில் உள்ள அநேக ஆங்கிலர்இந்தியருடன் நன்கு ஊடாடிப் பழகுகிறார்கள். இதுகாறும் ஆங்கிலர்தான் உபயோகிக்கலாம் என்றிருந்த அநேக ஸ்தலங்கள் இந்தியர்க்கும் திறந்து விடப்பட்டிருக்கின்றன.

## சென்னை மந்திரசபை

சென்னைக் காங்கிரஸ் கட்சிக்குள்ளேயிருந்து வரும் பிளவைப்பற்றி விசாரணைபுரிந்து ஏற்றன செய்வதற்குக் காங்கிரஸ் தலைவரான ஆச்சார்ய கிருபாலினி சென்னைக்கு வந்திருக்கிறார்.

சென்னைப் பிரதமரான ஸ்ரீஜுத் பிரகாசம். ஆச்சாரியகிருபாலினியின் வேலையைச் சுலபமாக்குதற்காக, தாமும் தம் சகாக்களான மந்திரிகளும் மந்திரசபையினின்றும் விலகத் தயாராகவிருப்பதாகத் தெரிவித்து, தாம் காங்கிரஸ்கட்டளைப்படி நடக்க ஆயத்தம்என்று ஸ்ரீஜுத் கிருபாலினிக்கு அறிவித்திருக்கிறார்கள். இதன்பயனாக கூடிய சீக்கிரத்தில், சென்னையில் நிலைமை சீரடையலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## இங்கிலாந்தின் கல்விச் செலவு

இந்த ஆண்டில் இங்கிலாந்தின் கல்விச் செலவுக்காக 13 கோடி 60 லட்சம் பவுண் செலவழிக்கப் பிரிட்டிஷ் அரசாங்கம் நிச்சயித்திருக்கிறது.

"இந்தியா முன்னேறி வருகிறது. உலகில் உள்ள சகல மக்களும ஒரே ஆண்டவனின் பிள்ளைகள்தான் என்னும் உயரிய கொள்கையைப் பரதகண்டம் உலகுக்குத்தெருட்ட அவாப்படுகின்றது."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.


# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், வியஹு
பங்குனிமீ கஉ வெள்ளிக்கிழமை


## சைவக் கல்லூரிகளை விருத்தியுறச் செய்க

II

இலவசக்கல்விப் பிரமாணம் வந்துள்ளதாகிய இந்த வேளையில், பள்ளிக்கூட வேதனமென ஒருசதந்தானுங் கொடுக்கவேண்டியதில்லையே யென்ற துணிவினால், முந்தி ஆங்கிலக் கலாசாலைகளிலும் கல்லூரிகளிலும் கல்வி பயின்ற மாணவர்களைக் காட்டிலும் மும்மடங்கு தொகையினர் சிறுவர்களுஞ் சிறுமியரும் ஆங்கிலம் பயிலவேண்டுமென்ற அவாக் கொண்டாராய்ப் பள்ளிக்கூடங்களிலே தங்களைச் சேர்த்துக்கொள்ளும்படி குறித்த குறித்த வித்தியாதாபனங்களின் ஆசிரியர்களையும் அதிகாரிகளையும் கேட்கின்றனர்; இங்ஙனஞ் சேர்ந்து படிக்க முயலும் மாணவருட் சைவமாணவர்களாயுள்ளவர்கள் பெரும்பாலும் சைவவித்தியாசாலைகளிலும் சைவக்கல்லூரிகளிலும் தாம் சேர்ந்து படிககவேண்டுமென்ற நோக்கங்கொண்டாராய், அவ்வக்கலாசாலை கல்லூரிகளின் ஆசிரியர்களையும் அதிகாரிகளையும இடந்தரும்படி கேட்கின்றனர்; இந்த வட இலங்கையிலே கிறீஸ்த மாணவர் தொகை விகிதம் மிக அற்பமாக, சைவசமயமாணவரின் தொகை மிக அதிகமாக விருத்தலினால், சைவக்கலாசாலை கல்லூரிகளான் ஆசிரியர்களும் அதிகாரிகளும் தங்கள் கல்வித்தாபனங்களில் இடமுற்றவரையில் மாணவர்களை ஏற்றுப் படிப்பிக்க, இடம்பெறாத சைவமாணவர் என் செய்வார்கள்! கிறீஸ்தவ கல்லூரிகளிலும் கலாசாலைகளிலுமே போய் இடங் கேட்கின்றனர்; அவ்வித்தியாதானங்களின் ஆசிரியர்களும் அதிபர்களும் கல்வி கற்பிப்பதோடு தங்கள் சமயத்திற்குச் சைவப் பிள்ளைகளை இழுக்கும் நோக்கமும் பூண்டவர்களாதலினாலே, இடமுண்டென்று சொல்லி அச்சைவப்பிள்ளைகளுக்கு இடங்கொடுத்துத் தம் சமயத்தை விருத்திபண்ணுவதற்கும் இடந் தேடிக் கொள்ளுகின்றார்கள்;

தம் சமயத்தைப் பரப்புதற்கான போதிய நிதி அவர்களிடத்தில் உண்டு ஆதலால், காற்றுள்ளபொழுதே தூற்றிக் கொள்ளவேண்டுமென்ற பிரகாரம், இச்சைவப் பிள்ளைகளை இழுப்பதற்காகத் தங்கள் வித்தியாசாலைக் கட்டடத்தையும் விடுதிச் சாலைகளையும், பன்னூற்றுக்கணக்கான மாணவர்களை ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலையில் விஸ்தாரமாக அமைத்து வருகின்றார்கள்; இனி, அவர்களுடைய வித்தியாசாலையிலே போய்ப்போய்ப் படித்துமுடித்து மீண்ட மாணவன் சில சமயங்களிலே, தன் சொந்தச் சமய அநுட்டானத்தோடு மீண்டு வந்தாலும் வருவான்; ஆனாற் கிறீஸ்தவ பள்ளிக்கூட விடுதிச்சாலையிலே தங்கியிருந்துகொண்டு அக்கலாசாலையிற் படிக்கும் மாணவன் தன் பெற்றாரின் சமயத்திற்குத் துரோகஞ் செய்யாமற் கிறீஸ்தவனாக மாறாமல் தன் படிப்பை முடித்துக்கொண்டு மீளுதல் அரிதினும் அரிதெனலாம். கிறீஸ்தவ விடுதிப் பாடசாலையிற் போயிருந்து படிக்கும் சைவமாணவன் சைவகாணவனாக மீண்டு பெற்றாரிடம் வருவது நூதனமேயல்லாமல், அவன் கிறீஸ்தவனாக மாறுவது நூதனமல்லவே; ஏன்? காஞ்சோன்றிச் செடியைத் தீண்டினால் தீண்டிய உடம்பின்பாகத்திற் சொறிவுண்டாவதும், தேளைத் தொட்டால் அது தொட்டவனைக் கொட்டுவதும் நூதனமா? அங்ஙனமன்றிச் சொறிவுண்டாகாது போதலும், கொட்டாமல் விடுதலும் நூதனமா? பிந்தியதுதான் நூதனம். குற்றம் யார் மேலது? தீண்டியவன் தொட்டவனென்னுமிவர்கள் மேலதேயன்றிக் காஞ்சோன்றி, தேள் என்னுமிவைகள் மேலதன்று; ஆனதால் நாம் அந்நியமதக் கலாசாலைகளிற் கல்வி பயிற்றும் ஆசிரியர்களையாக, அதிகாரிகளையாகக் குற்றஞ்சொல்ல ஞாயமில்லையெனலாம். என்னை? யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி முதலிய சைவவித்தியாதாபனங்களிலே, சைவமாணவர்களோடு மாத்திரம் அமையாது, பௌத்தப் பிள்ளைகள் இஸ்லாமியப் பிள்ளைகள், கத்தோலிக்கப்பிள்ளைகள், மற்றைக் கிறீஸ்தவப் பிள்ளைகளெல்லாரும் தங்கள் தங்கள் சமயாநுஷ்டானங்களுக்கு எவ்வகையான பங்கமுமின்றி இன்றுங் கல்வி கற்கின்றார்களே, அப்படி இந்தக் கிறீஸ்த கல்லூரி கலாசாலைகளின் அதிகாரிகளுஞ் செய்தாலென்ன? என்று கேட்டால், அப்படியல்ல, அவர்கள் நோக்கம்வேறு இவர்கள் நோக்கம்வேறு, எச்சமயப்பிள்ளைகளாயிருந்தாலும் தம் கல்லூரி கலாசாலைகளையடைந்த பிள்ளைகட்கு அவரவர் மார்க்கக் கொள்கைகளுக்குப் பங்கம் நேராவண்ணம் பார்த்துக்கொண்டு தங்களால் இயன்ற கல்வியை ஊட்டிவைக்கவேண்டுமென்பதுதான் அந்தச் சைவ வித்தியா தாபனங்களின் அதிகாரிகள் ஆசிரியர்களுடைய கொள்கையாகும்; எந்தச்சமயப் பிள்ளைகளாயிருந்தாலும், தங்கள் பள்ளிக்கூடத்தில் எக்காரணத்தினால் வந்து சேர்ந்தாலும், அந்தப் பிள்ளைகளை அவர்களுடைய மார்க்கத்தை மறக்கச் செய்து தங்கள் மார்க்கத்திற்கு இழுக்கவேண்டுமென்பதே இந்த அந்நியமத வித்தியா ஸ்தாபனங்களின் அதிகாரிகளும் ஆசிரியர்களுங் கொண்ட நோக்கமாகும். இதற்குத் திருட்டாந்தமாக இரண்டொரு [illegible] நிகழ்ச்சியைப் பின்னர் [illegible] காட்டுவோம்.

# ஆசிய மகாநாடு

## இலங்கைப் பிரதிநிதிகளின் கடமை

.... ஸ்ரீதரன் ...

ஆசியாக் கண்டம் இன்று விழிப்படைந்து இருக்கிறது. ஒருகாலத்தில் மிலேச்சகண்டமென இருந்த மேனாட்டின் அந்தகார இருளைப் போக்க, மதகுரவர்களை அளித்து, சீர்திருத்தம் நாகரிகம் என்பவற்றை நல்கிய இந்த ஆசியாக் கண்டம காலத்தின் கோலத்தால் ஐரோப்பிய நாடுகளுக்கு அடிமையாகத் தன் அந்தஸ்தை இழந்து அதன் மக்கள் கேவலம் கறுப்பர் என்றும் நீகிரோவர் என்றும் நிறத்திமிர் பிடித்த வெள்ளையரால் பன்னெடுங்காலமாக உதாசினப்படுத்தப்பட்டு வந்தனர். ஆனால் இன்று காலச்சக்கரம் சுழன்றுவரும் வேகத்தில், பழையன கழிந்து ஓர் புதிய சகாப்தம கிழக்குத் திசையில் உதயமாகின்றது இதற்குப் பாதகண்டம் வழிகாட்டி வருகின்றது. இன்னும் ஒருசில வருஷங்களில், ஆரியநாட்டின் தலைமையில் ஆசியாக் கண்டம் தலைநிமிர்ந்து நின்று உலகாயுதக் கொள்கையில் தவித்துநிற்கும் மேனாடுகளுக்கு வழிகாட்டப்போகின்றது என்று கூறின் மிகையாகாது. அதற்கு உற்பாதமாகவே. இன்னும் சில தினங்களில், முன்னர் இந்திரப் பிரஸ்தமென்று வழங்கி, உதிட்டிரன் முதலாம் பஞ்சபாண்டவர்கள் மநுநீதி தவறாது செங்கோலோச்சிய அதே இடத்தில் அதே டெல்கி நகரத்தில், ஆசிய மக்கள் மகாநாடு கூடவிருக்கிறது. சரித்திரத்தில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த இம்மகாநாட்டுக்கு, கீழைத்தேய நாடுகள் அனைத்தும் தம் பிரதிநிதிகளை அனுப்பும். ஐரோப்பிய அமெரிக்க நாடுகளும், இம்மகாநாட்டு நடைவடிக்கைகளை அவதானிக்கத் தம் பார்வையாளர்களை அனுப்புமாம். எங்கள் இலங்கையிலிருந்தும் நாலு மந்திரிகள் உள்படப் பல பிரதிநிதிகள் ஆங்குச் சமூகஞ்செய்து நடைவடிக்கைகளிற் பங்குபற்றவிருக்கிறார்கள். எங்கள் நாடு சின்னஞ்சிறிய தீவுதான். ஆனால் சரித்திரப் பிரக்கியாதிவாய்ந்தது. கலை, சித்திரம், சமயம், ஞானம் என்பவற்றில் இச்சிறியதீவு, மற்றெந்த நாட்டுக்கும் பின்னிற்காதது. எனவே, இத்தேயப் பிரதிநிதிகள் தம் நாட்டின் புராதன அந்தஸ்துக் கேற்ப, அதன் சௌரவத்தைக் காப்பாற்றும் முறையில் ஷை மகாநாட்டிற் பங்குபற்றி, அம்மகாநாடு கொண்ட மேலான லட்சியத்துக்காசத்தம் அறிவை, ஆற்றலை, அநுபவத்தை அளித்து, இந்நாட்டுக்குச்சிறப்பையும்கௌரவத்தையும் அளிப்பார் என்று எதிர் பார்க்கிறோம்.

# உலகம் பலவிதக் கதை

(முற்றொடர் - 8)

### வேதியர்க்கழகு வேதமும் ஒழுக்கமும்

"பிராமணர்களாகியஎங்களுட் சிலரொழியப் பலர் வேதியர்க்கழகு வேதமும் ஒழுக்கமும் என்ற மூதுரையை அறவே மறந்து தங்களுக்கு விதிக்கப்பட்ட நியதிகள் ஆசாரங்கள் ஆறுகடமைகள் முதலியவற்றை மெல்ல மெல்லக் கைவிடத் தலைப்பட்டுக்கொண்டனர்; எங்கள் குலத்தவர் தாம் ஆவசியகம படித்துத் தேற வேண்டிய பாஷைகளாகிய வடமொழி தென்மொழிகளைப் பயில்வதைமறந்து, ஆங்கிலத்தையே பயில வேண்டுமென்ற நோக்கமுடையவர்களானார்கள்; எங்கள் சாதியிலுள்ள பெறாருட் பலர் தாங்கள் ஒரு அளவிற்கு ஆரியமுஞ் செந்தமிழும் ஆராய்ந்தறிந்தவர்களாயிருந்தும், தங்கள் பிள்ளைகட்கு அவைகளை இளமைப் பருவத்திற பயிற்றி அப்பாஷைகளிலே அவர்களை விருத்தியுறச் செய்யாது, ஆங்கிலத்தைமாத்திரம ஊட்டுவிக்க முயற்சி செய்கிறார்கள்; அந்த இரண்டு பாஷைகளோடு ஆங்கிலத்தையும் தம் பிள்ளைகட்குச் சேர்த்துப் பயிற்றுவித்தால், அதனாற்பெரும் நன்மையுண்டாகும்; இந்தியாவிலே நம அந்தணசாதியினராக, வேறெச் சாதியினராக நான்கு ஐந்து பாஷைகள் பயின்றவர்களாகவிருக்க, எங்களுடைய இந்த நாட்டிலேதான் ஒரு பிள்ளை ஒருபாஷை இல்லையேல் இரண்டுபாஷைக்கு மேலே தான் பயின்றுகொள்வதற்குப் பயப்படுகிறான்; இனி வடமொழியையும் தமிழையும் ஒரு அளவிற்குப் பயின்றுகொண்டு, பிராமணப்பிள்ளை ஆங்கிலத்தைப் படிக்கத் தொடங்கினால், அப்பிள்ளையின் குலதர்மம் ஆசார அநுட்டானமென்னுமிவைகட்குப் பெரும்பான்மையும் பங்கம் நேரமாட்டாதென [illegible] இல்லாமையினாற்றான் [illegible] சிறுவர்களுட் பலர் தனியே ஆங்கிலத்தைப் படித்துவிட்டுத் தமக்குரிய ஆசார ஒழுக்கங்களை மறந்து உடை நடை பாவனைகளை விபரீதமாக்கிப் பிராமணன் என்ற மதிப்பை யிழந்து இடர்ப்படுகிறார்கள், தம்பி, நாம் எங்கள் சாதியைப் பெருமைப்படுத்துவதற்காகச் சொல்லுகிறோமென எண்ணிக்கொள்ளவொண்ணாது; எங்களுடைய இந்த நாட்டிலே கல்வியறிவொழுக்கம் பெருந்தன்மை முதலிய செயல்களோடுங் குணங்களோடுங் கூடிய பிராமணரை எங்கள் பிராமண வகுப்பினரும், ஏனைய சாதியினரும் அன்றும் இன்றும் என்றும் மேன்மையாக மதித்துப் பாராட்டி அப்படிப்பட்ட அத்தணருடைய சொற்கேட்டே நடந்து வருகிறார்கள்; அப்படி மதிப்புப்பெறும் மறையவர் இக்காலத்திற் சிலரினுஞ் சிலரே யிருக்கிறார்கள்; அப்படிப்பட்டவர்களொழிய ஏனையோர் தங்கள் ஒழுக்கத்திற் பெரும்பாலுந் திறம்பியவர்களாய்த் தாம செய்யும் ஆன்மார்த்த பரார்த்த பூசைகள், இன்னும் சமய சம்பந்தமாகவுள்ள கிரியைகள் முதலியவற்றையெல்லாம பத்திசிரத்தையென்னுமிவைகளின்றிப் பொருளுக்கு ஆசைப்பட்டு வியாபார முறையிற் செய்யத் தலைப்பட்டுக் கொண்டார்கள்; வறுமையும் கல்வியறிவின்மையும் ஒருங்குசேர்ந்து எங்கள் வருணத்தார் பலரைத் தமது விதிக்கு விலக்கப்பட்ட கருமங்களையுஞ் செய்யும் வண்ணந் தூண்டிவிட்டன; ஆனால், நம்முடைய மரபினர் செய்யும் பிழைகளை நாமே யெடுத்துத் தூற்றுதல் முறையல்ல; இவ்வாறு எங்கள் குலத்தில் ஏதுந் தவறிருந்தால் அத்தவறை யகற்றி ஏனையசாதி மக்களையுந் திருத்தி நல்வழியில் ஒழுகச்செய்யவேண்டிய முதல் வருணத்தவர்களாகிய எங்களுட் பலர் ஒழுக்கந் திறம்பியமை

(தொடர்ச்சி 5ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திய அரசியல்

# சமரசம் வருமா?

## லீக்கரின் முரட்டுச் சுபாவம்

காங்கிரஸ் கோரியபடி, அரசியல்மாற்ற வியவகாரத்தில் முஸ்லிம்லீக் ஒத்துழைப்பு அளிக்குமா? அல்லது இன்னும் பிடிவாதம் சாதித்து பாகிஸ்தான் பல்லவி பாடிக் கொண்டுதான் இருக்கப்போகிறதா? இந்தக் கேள்விக்கு இன்னும் திட்டமான பதில் எதுவும் லீக்கரிட்மிருந்து கிடைக்கவில்லை. ஜின்னு இன்னும் மவுனம் சாதித்தே வருகிறுர். ஆனல் அரசியல் நிர்ணய சபையில் லீக் கலந்துகொள்ளக் கூடாது என்ற பழைய கருத்தையே அவர் இன்னும் கொண்டிருப்பதாக அவருடன்ஊடாடுபவர்கள் கூறுகிறுர்கள். ஜின்னு இன்னும் சில தினங்களில் டெல்கிக்குச் செல்லலாம் என்றும், லியாகத் அலிகானுடன் கலந்தாலோசித்து முஸ்லிம்லீக்கின் காரிய நிர்வாகசபையைக் கூட்டுவதற்குத் திகதி குறிப்பிடுவாராம். ஆனல் அப்படிக் கூட்டுவதும், மவுன்ற்பேற்றன் பிரபு இந்தியாவுக்கு வந்து பதவியேற்று, எவ்விதமாக வியவகாரங்களை நடத்துகிறுர் என்பதை அவதானித்தபின்னரே என்றும் தெரிகிறது.

○

### அழைப்பு ஏற்றுக்கொள்ளப்படுமா?

பிரிட்டிஷ் அரசாங்கத்தின் பிந்திய அறிக்கையினுல் ஏற்பட்ட பிழைகளைப் பற்றி ஆலோசித்து, ஏற்ற நடைவடிக்கைகளை எடுப்பதற்குச் சகலரும் இப்போதே ஆயத்தம் செய்துகொள்ளல் வேண்டும். அதன்பொருட்டுக் கலந்து பேச பிரதிநிதிகளை அனுப்பும்படி காங்கிரஸ் முஸ்லிம் லீக்கைக் கேட்டிருக்கிறது. லீக்கும்; பேச்சுவார்த்தைகள் நடத்த சில பிரதிநிதிகளை அனுப்பலாம் என்று டெல்கி வட்டாரங்கள் பேசிக்கொள்ளுகின்றன. ஆனல் எது நிகழ்ந்தபோதிலும், பாஞ்சாலத்தையும் வங்காளத்தையும் பிரிக்கமுடியாது என்று லீக்கர் கருதுகிறுர்களாம். இந்தியாவை இரு துண்டுகளாகப் பிரிக்கச் சொன்னதேயன்றி மாகாணங்களைத் துண்டாட நாம் கேட்கவில்லை என்று லீக்கர் இப்போது கூறிக்கொள்ளுகிறுர்கள்.

○

### அமிர்தசரஸில் 5000வீடுகள் நாசம்

பாஞ்சாலத்தில் இராணுவம் அமைதியை நிலைநாட்டி வருகிறது. லீக்கர்கள் இன்னும் ஓர் மந்திரசபையைத் தாமே அமைக்கத் துணிந்து முன்வரவில்லை. தனியே லீக் மந்திரசபை பாஞ்சாலத்தில் அமைக்கப்படுமாஞல்,தம்ஆருயிரைஅர்ப்பணம்செய்யச் சீக்கியர்பிரமாணிக்கம்செய்திருக்கின்றனர். பாகிஸ்தான் கொள்கையைக் காற்றிற் பறக்கவிட்டு, சகல கட்சிகளையும் கொண்ட ஓர் மந்திரசபையை அமைக்க லீக் முன்வரவேண்டும். இதுவே பாஞ்சாலத்துக்கு உகந்த தென்பதைப் பாஞ்சால லீக்கர் உணருகிறுர்கள். ஆனல் அவர்களுடைய எண்ணப்படி நடக்க ஜின்னு விரும்புகிறுரில்லை. அமிர்தசரஸில் இதுவரை 5000 வீடுகள் நாசமாய்விட்டன.

○

### எல்லைப்புற அட்டூழியம்

எல்லைப்புறத்தில் காங்கிரஸ்மந்திரசபையைக் கவிழ்த்து, லீக் மந்திரசபையை அமைப்பதற்கு ஜின்னு இப்போது அங்கே சட்டமறுப் பியக்கத்தைத் தூண்டிவிட்டிருக்கிறுர். பட்டாணியர் இந்த வெருட்டுகளுக்குப் பயப்படுவதாக்த் தெரியவில்லை. சென்ற புதன்கிழமை எல்லைப்புற நிதி மந்திரியான ஸ்ரீஜஓத் மெஹர்சந்த் கன்னு என்பவர் தமது வீட்டின் விறுந்தையில் உட்கார்ந்திருந்தபோது சிலர் அவரை நோக்கிச் சுட்டனர். தெய்வாதீனமாக அவர்மீது குண்டுகள் பாயவில்லை இந்த அக்கிரமத்தைச் செய்தவர்கள் லீக்கரின் கையாட்கள் என்று கூறப்படுகிறது.

○

### அசாமில் லீக் போராட்டம்?

பாக்கிஸ்தானத்துக்கு வேண்டிய மாகாணங்கள், சிந்து, பாஞ்சாலம், வங்காளம், எல்லைப்புறம், அசாம் என்று ஜின்னு கனவு காண்கிறுர். முதற் கூறப்பட்ட நாலு மாகாணங்களிலும் ஜின்னு செய்த கிருத்திரமங்களை உலகம் அறியும். ஆனல், சிந்திலும் வங்காளத்திலும் மாத்திரமே அவர் தமது லீக் அரசாங்கத்தை நாளிதுவரை அமைக்க முடிந்தது. பாஞ்சாலத்தில் அந்த முயற்சி காரணமாக நடந்துள்ள அநர்த்தங்கள் பல. இப்போது ஜன்னு சாகிப் அசாமில் தம் திருஷ்டியைச் செலுத்திபிருக்கிறுர். அசாம், ஹிந்துக்களையே பெரும்பான்மையினராகக் கொண்டுள்ள போதிலும், அதனையும் பாகிஸ்தானுடன் சேர்க்க ஜின்னு அவாப்படுகிறுர். அங்கே இப்போது சட்டமறுப்புத் தொடங்கப் பட்டிருக்கிறது. அசாம் மாகாண முஸ்லிம்லீக் தலைவரான மௌலான அபுல் ஹமீத்கான்மீது அசாம் மாகாண அரசாங்கம் விதித்த தடையுத்தரவை மீறி நடந்ததற்காக அன்னுர் சிறைப்படுத்தப்பட்டார். இவர் இப்படிச் சட்டத்தைமீறியது அசாமில் சட்டமறுப்பியக்கம் ஆரம்பமாகியிருப்பதைக் குறிக்கிறது.

○

### லீக்கரின் பாராட்டு

மகாத்மாகாந்தி பீகார் மாகாணத்திற் சமூகக் கலவரங்களினுற் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்டு வருகிறுர். அந்த மாகாணத்திலே மிகப் பாரதூரமான விதமாக மூஸல்மான்கள் கொல்லப் பட்டுவிட்டனர்என்று தெரிகிறது. ஆனல் காங்கிரஸ் வாதிகளும், பண்டிதர் நேரு முதலாம் தலைவர்களும் இவ்விஷயத்தில் நடந்துகொண்ட விதத்தை முஸ்லிம்லீக் தலைவர்கள் பாராட்டுகிறுர்கள். பீகார் மாகாண முஸ்லிம்லீக் தலைவரான ஜபால் இமாம் என்பவர், காந்திஜிபீகார்மாகாண மூஸல்மான்கள் விஷயத்திற்கொண்டுள்ள கவலையைப் பாராட்டி ஓர் அறிக்கை விடுத்துள்ளார்.

○

### பிரெஞ்சிந்தியா

இந்தியாவிலே பிரிட்டிஷ் அதிகாரத்தில் உள்ள இடங்களைவிட போர்த்துக்கீசர், பிரான்சியருக்கும் அங்கே சில இடங்கள் உண்டு. காரைக்கால், புதுச்சேரி சந்திரநாகூர் மாஹே,யேனுன் என்பவை பிரான்சியர் ஆதிக்கத்தில் உள்ளன. இவற்றின் விஸ்தீரணம் 196 சதுர மைல். எல்லாமாக 323,000 பேர் வசிக்கிறுர்கள். பிரான்சியப் பாராளுமன்றத்தில், பிரெஞ்சிந்தியமக்கள் அங்கத்துவம்வகிக்கிறுர்கள். இந்தியா சுதந்திரமடையுங் காலத்தில் பிரெஞ்சிந்தியாவும் சுதந்திர முடைய நாடாய் நேசபான்மையுட னிருக்குமென்று பிரான்சின் குடியேற்றநாட்டு மந்திரி ஓர் அறிக்கை விட்டிருக்கிறுர். ஆனல் இந்த நல்லபுத்தி போர்த்துக்கீசருக்கு வரவில்லை அவர்களுடைய ஆதிக்கத்தில் உள்ள கோவையில் இன்று அடக்குமுறை ஆட்சி நிகழுகின்றது.

# ஆசியாவில் ஆங்கிலர் நிலை

## எதிர்காலம் சுபிட்சமுடையதாம்!

இந்தியா விஷயமாக பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில்நிகழ்ந்த விவாதத்தைப்பற்றி நியூயோர்க்கில் பிரசுரமாகும் "ஹெரல்ட் ட்ரிபியூன்" பத்திரிகை பின்வருமாறு குறிப்பிடுகிறது:—

"இங்கிலாந்து இந்தியாவுக்குச் சுதந்திரம் வழங்கி, அந்த நாட்டிலிருந்தும் விலகத் தீர்மானித்தது ஈற்றில் இங்கிலாந்துக்கே நன்மையாக முடியும் என்பதே எமதுதிடமான அபிப்பிராயம். ஏன்? இப்படிச் செய்வதால் பிரிட்டன்மீது இந்தியாவுக்கு நேசபான்மை ஏற்பட்டுவிடும். அதன்பயனுக பிரிட்டிஷாரின் பொருளாதார நிலைமைக்குப் பங்கம் ஏற்பட்டுவிடாது.

"ஆசியாவிலும் பிரிட்டிஷாருடைய நிலை எதிர்காலத்தில் நல்லாயிருக்கும் என்றே நம்புகிறேம். பிரான்சிய அரசாங்கத்தாரும், ஒல்லாந்தரும் இன்று ஆசியாக் கண்டத்திற் படும் அவதிகளிலிருந்தும் பிரிட்டன் புத்திசாலித்தனமாகத் தப்பிக் கொண்டது. இது பிரிட்டிஷ் இராசதந்திரத்துக்கே ஓர் பெரும் வெற்றியாகும்."

## பஞ்சாட்சர விளக்கம்

.......இறைமணி.......

சிவபஞ்சாட்சரத்தின் மகிமையை அறியாத தமிழர் இருக்கமாட்டார்கள். ஐந்தெழுத்து மந்திரத்தைக் கடைப்பிடித்தே ஆன்றேர் தம் பிறவிப் பெருங்கடலைக் கடந்தனரென அறிகிறேம். வேதாந்தசித்தாந்த ஞானிகள்தான் இப்பஞ்சாட்சரத்தின் உட்பொருளையும் தத்துவத்தையும் அறியமுடியும். எனைச் சிற்றறிவுடையோருக்கு இதன்பொருள் நன்கு புலப்படாது

இப்பஞ்ச அக்கரத்தின் பொருளையும் அதனை உபாசிக்கும் முறையினையும், அதனுற் பெறற்பாலதாய பயனையும் விளக்குவதே இச்சிறு நூலாகும். இதனை இயற்றியவர் வை. உ. முருகேசபிள்ளை. இவர் பல இடங்களில் ஆசிரியத் தொழில் நடத்தியவர். இற்றைக்கு பதினைந்து வருடங்களுக்குமுன் பரமபதமடைந்தவர். யாழ்ப்பாணத்தத தொடர்புடையவரேனும் சீவிய காலம்முற்றும் மட்டுநகரிலேயே வாழ்ந்தவர். இவரது மனைவியாரும் மக்களனைவரும் ஆசிரியத் தொழிலையே மேற்கொண்டனர். இவர் பல ஊஞ்சல்களும், 'கந்தர் பந்தனம்', சாதிவரலாறு' முதலிய வேறு நூல்களும் பாடியிருக்கிறுர். சிறந்த அறிஞர்- வேதாந்த சித்தாந்த பண்டிதர்.

பத்துப் பாடல்களாலேயே இயற்றப் பட்ட இச்சிறுநூலின் உட்பொருளை அதனைப் படித்தே தெரிந்துகொள்ளுதல்முடியும்.

காப்பு

அம்பிசிவன் மைந்தன் அரிமருக னைந்து
கரன்
தம்பிமுகன் தொந்தி வயிற்றழகன்—நப்பு
பதம்
என்றும் நினைப்பவர்கள் ஈர்வினையில் நீங்கி
யதால்
சென்றடைவார் மூத்தி சிறந்து.

ஓமென்னும் பிரணவமே உடலாய் நின்று
உயிரடையு மெழுபிறப்பு மமர்ந்து கூடி
ஆமென்னு மட்சரத்தி னுட்பொருளை
அறிந்துநித மடியவர்கள் போற்றிநிற்க
ஊமென்னு மட்சரத்தி லொன்றுய்க் கூடி
ஊதான பிரபஞ்சந் தோற்றச்செய்து
தாமென்னு மகரத்திற் சேருங்காலை
சகலமுமாய்ச் சூனியமாய்த் தரிக்குந்
தேவே.

நமசிவய வென்றுன்னி மனத்தி லேற்றி
நாடோறும் சுத்தியுடன் செபித்துப்
போற்றி
நிமையதனைச் சுழியினிலே நிறுத்தி நோக்
கின்
நின்னுருவைக் கண்டிடலாம் நிமலா
வென்றும்
அமையாத குரக்குமனந் தன்னையானும்
அடக்கும்வழி யீதல்லால் வேறுண்டா
மோ
உமதுபதஞ் சரணமெனவடைந்தேனையா
உலகினிலே மாயவலை நீக்குந்தேவே

மசிவயந வென்றுபஞ் சாட்சரத்தை
வழுத்தியேவாசிதனைக்கூட்டியென்றும்
சுசியுடனேயுன்நாமம்தொழுதிட்டோர்க்கு
தொல்லுலகில் கவலையுண்டோபிணிதா
னுண்டோ
பசியுண்டோ அமிர்தமுண்ட பேருக்கென்
றும்
பாலுண்ண சிறுகுழந்தை அழுவதுண்
டோ
நீசியினிலும் நின்பாதம் மறவேனையா
நித்தநடம் மன்றினிலே புரியுந் தேவே.

சிவயநம வென்றேத்தி வாசிதன்னைத்
தினம்சேர்த்துச் சுழிமுனையிற் சிக்க
வைத்தால்
பவநீங்கும் பிணிநீங்கும் கவலை நீங்கும்
பாருலகிற் பலகாலம் வாழ்வாருண்மை
தவமுனிவரறியாத மந்திரத்தின்
தன்மையதி சாற்றுதற்குமெளிதாமோ
அவபெலா மகலவட்ட சித்திகூடும்
அன்பருள்ளம்மேவிநிற்கும்தேவதேவே.

# சீனத்தின் தலை விதி!

## மொஸ்கோ மகாநாட்டில் விவாதம்

இன்று மொஸ்கோநகரத்தில் (ருஷியா) நாலு வல்லரசுகளின் (இங்கிலாந்து, பிரான்ஸ் அமெரிக்கா ருஷியா) அந்நியநாட்டு மந்திரிகள் மகாநாடு நிகழ்கிறது இந்த மகாநாட்டில் சீன தேசத்து உள்நாட்டு விவகாரங்களைப்பற்றி விவாதிக்கவேண்டுமென்று ருஷியா கேட்டுக்கொண்டதை முதலில் மற்றப் பிரதிநிதிகள் ஆட்சேபித்தனரேனும், பின்னர் அதற்கிணங்கி, அவ் விஷயமாக விவாதித்து வருகின்றனர்.

சீனத்திலே இன்று இரண்டு பெரிய கட்சிகள் அதிகாரம் செலுத்தி, அந்நாட்டை இரண்டு பாகமாக ஸ்வீகரித்துக் கொண்டிருக்கின்றன. ஓர் கட்சி, சமதர்மிகள் கட்சி. மற்றது சியாங்கே ஷெயிக் கட்சி. சமதர்மிகள்கட்சிக்கு ருஷியாவின் ஆதரவு உண்டாம். சியாங்கே ஷெயிக்கின் அரசாங்கத்துக்கு இங்கிலாந்து, அமெரிக்கா என்னும் இரு வல்லரசுகளின் உதவியும் பூரணமாக உண்டு. இப்படியாக உலக வல்லரசுகளின் தந்திரத்துக் கிடையில் அகன்ற சீனம் நின்று தத்தளிக்கிறது,

சீனத்தின் உள்நாட்டு வியவகாரங்களை—எந்த நாட்டின் உள்நாட்டுப் பரிபாலனம் சம்பந்தமான விஷயங்களைவிவாதிக்க—இன்று மொஸ்கோவிற் கூடியுள்ள அந்நியநாட்டு மந்திரிகள் மகாநாட்டுக்கு அதிகாரம் இல்லை. எனவே அப்படி விவாதிக்கத் துணிந்தமை, ருஷியாவின் சர்வாதிகாரக் கொவத்தைக் காட்டுகிறது எனச் சீன அரசாங்கம் (சியாங்கே ஷெயிக்கின் அரசாங்கம்) கண்டிக்கிறது. எந்த அந்நிய நாடாவது எங்கள் வியவகாரங்களில் தலையிடக்கூடாது என்று சீனத்து மக்கள் இன்று [illegible]

## 3 மாத அதிகாரம்

### அரசாங்கசபை ஜூலையிற் கலைக்கப்படும்

சென்ற திங்கட்கிழமை நிகழ்ந்த மந்திரசபைக்கூட்டத்தில், தேர்தல் உத்தியோகத்தராகிய மிஸ்ரர் ஈ. ஆர். ஸட்பெரி தேர்தல் விஷயமாக எழுத்துள்ள கஷ்டங்களை மந்திரிமார்க்கு எடுத்துரைத்தார்,

இங்கிலாந்தில் அச்சிடப்படும் தேர்தல் இடாப்புக்கள் இங்கே இன்னும் முற்றுக வந்துசேரவில்லை. ஆக மிஞ்சினல் ஜூலை மாதம் 31-ம் திகதிக்குமுன் அவற்றைப் பெறமுடியாது என்று மிஸ்ரர் ஸட்பெரி கூறினர். இந்த நிலைமையில் பாராளுமன்றத் தேர்தல்களை அக்டோபர்மாதம் கடைசிக் கிழமைக்குமுன் நடத்துதல் முடியாத காரியமென்று அவர் மந்திரிகளுக்கு அறிவித்தார்.

இப்போது வந்துள்ள தேர்தல் இடாப்புக்களில் அநேக பிழைகள் புகுந்துவிட்டன என்றும் தெரிகிறது. இவற்றைத் திருத்தி அச்சிடவும் காலம் தாமதமாகும்.

இந்த நிலைமையில் ஆகஸ்டு மாதத்தில் தான் நியமனப்பத்திரங்களைச் சமர்ப்பிக்கலாம் என்று மிஸ்ரர் ஸட்பெரி தெரிவித்தார்.

ஜூலை மாதம் அரசாங்கசபை கலைக்கப்படும். புதிய பாராளுமன்றம் வருகிற நவம்பர் மாதத்தில்தான கூடும். அதுவரை மந்திரிமாரே அதிகாரம் வகிப்பர்.

### பழைய வங்கத் தேசாதிபதி மரணம்

வங்காளத்தின் தேசாதிபதியாக முன்னர் இருந்த சேர் ஸ்ரான்லி ஜாக்ஸென் சென்றவாரம் லண்டனில் தேகவியோகமானர்.

## ஆளுக்கு 6 றீம் கடதாசி

பாராளுமன்றத்து அபேட்சகராக வருபவர்க்கு ஆளுக்கு 6 "றீம்" கடதாசி வாங்க உத்தரவு கொடுப்பது என கைத்தொழில் நிருவாகசபை தீர்மானித்திருக்கிறது. இத்தொகை கடதாசி முழுவதும் ஒரே சமயத்திற் கொடுக்கப்படமாட்டாது. ஒருமுறை 2 றீமும், மற்றமுறையில் 4 றீமுமாக வாங்க அனுமதியளிக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ சத்தியோசாத சிவாசாரியர்

பிரமஸ்ரீ ச. பொன்னுஸ்வாமிக் குருக்கள்

பத்ததிகள் செய்த சிவாசாரியர் பதினெண்மர்களுள் சத்தியோசாத சிவாசாரியரும் ஒருவராவர்; இவரும் அகோர சிவாசாரியரைப்போலவே பிரதிஷ்டாந்த உத்ஸவாந்தம் உத்ஸவாதி பிராயிச்சாந்த முதலியவற்றைச் செய்திருக்கின்றார்; இப்பத்ததியைக்கொண்டே ஷோடசக்கிரியை, தீக்ஷை, சிவபூசை முதலியவற்றைச் செய்திருக்கிறார்கள். இது காலங்கண்ட பெரியோர்களிடம் ஏட்டுப் பிரதியாகவே யிருக்கின்றது. பச்சாப்பேட்டையிலிருந்த சத்தியோசாத சிவாசாரியர் வேறாகவிருக்கலாம். அவரும்,

"அறங்கருமாகமத்தினொடு முரணாத பொருளை
யகன்மிருதிபுராணதிநூல் விளம்பிற் கொள்க.
சிறந்த சிவாகமத்தினொடு முரணுகின்ற பொருளைச்
சேர்ந்தபலநூல் சொலினுந் தீதெனவே விடுக
நிறைந்தவருட்பரமபதி நிகழ்த்திடு வாக்கியமே
நேர்ந்தபசு வாக்கியங்க ளனைத்தையும் பாதிக்கும்
பறைந்த பசுவாக்கியங்கள் பலதிரண்டு வரினும்
பதிமொழியைப்பாதிக்கப் பலமில வென்றனரே"

என்னும் பிரமாணப்படி பதிவாக்கியத்திறகு (மூலாகமத்திற்கு) ஒன்றும் மாறாகச் சிருஷ்டிக்கவில்லையே.

எனவே அகோர சிவாசாரியருள்ள காலத்திற்றானே சத்தியோத சிவாசாரியரும் பத்ததியை உண்டாக்கியிருக்கின்றார் என்பதை நன்கு ஆராய்ந்துகொள்வார்களாக.

இலிங்கஸ்தாபன விதிபடலத்தில் கிழக்குத் திக்கில் இருக்குவேதமும், தென்திக்கில் யசுர்வேதமும், மேற்குத்திக்கிற் சாமவேதமும், வட திக்கில் அதர்வண வேதமும, கோணங்களில் அந்தந்த மூர்த்திக்குரிய மூலமந்திரங்களையுஞ் செபஞ் செய்யும்படி சொல்லியிருக்கிறது. தமிழ மறையைப்பற்றி அப்படியொன்றுஞ் சொல்லவில்லையெனினும், அதனை எந்த நேரமும் பாராயணஞ் செய்தால் திருவேறும்.

## நேருவின் பாராட்டு

பண்டிதர் ஜவஹர்லால் நேரு, தென்னாபிரிக்க இந்தியர் விஷயமாக ஐக்கியதேசஸ்தாபனத்தில், ருஷியா இந்தியப் பிரதிநிதிகளுக்குக் கொடுத்த ஆதரவைப் பாராட்டி ருஷிய அந்நியநாட்டு மந்திரியான மொலோற்றவிற்கு ஓர்பாராட்டுதற்செய்தியனுப்பியுள்ளார் என்று மொஸ்கோ ரேடியோ தன்தேச மக்களுக்குச் சென்றவாரம் அறிவித்திருக்கிறது.

## யூதர் பிரச்சினை

பலஸ்தீனத்தில் யூதர் பிரச்சினையைப் பிரிட்டிஷ் அரசாங்கம் சமரசமாகத்தீர்க்க முடியாமல் இவ்விஷயத்தை ஐக்கியதேசஸ்தாபனத்தின் தீர்ப்புக்கு விட்டிருக்கிறது. இதற்கிடையில்பலஸ்தீனத்தில் யூதப் பயங்கர இயக்கத்தினரின் சதி வேலைகள் மிகவும் மும்முரமாக நடக்கின்றன. பலஸ்தீனத்தில் இப்போது இராணுவச்சட்டம் அமுலிலிருக்கிறது. ஐக்கியதேச ஸதாபனம் எப்படித் தீர்ப்புக் கூறினாலும் பலஸ்தீனத்தில் அராபியர் ஆட்சியே நடக்க வேண்டுமென்றும், அதனைப் பூர்த்தியாக்குவதில் அராபியர் அனைவரும் சலியாது ஒத்துழைப்பர் என்றும் அராபியத் தலைவர்கள் கூறுகின்றனர்.

### சர்தார் அஜீத் சிங்

பிரபல இந்தியப் புரட்சித் தலைவரும் 39 ஆண்டுகட்கு முன் இந்தியப் புரட்சி இயக்கதை ஆரம்பித்து, பிரிட்டிஷார்க்குவிரோகமாகக் கலகம் விளைத்தவருமான சர்தார் அஜீத் சிங், தாயகந்துறந்து சென்ற 39 வருடகாலமாக அந்நியநாடுகளில் வசித்து வந்தார். அவர் இப்போது பண்டிதர்நேருவின் முயற்சியால் இந்தியாவுக்கு மீண்டுவிட்டார். அவர் இனி இந்தியாவிலே சமூக ஒற்றுமைக்காகத் தம் வாணாளைச் செலவழிக்கப் போவதாகக் கூறுகிறார்.

## யாழ்ப்பாணம் சுப்பிறீம்கோடு

காங்கேசன்துறை வாசியான இளையவன் சின்னன் என்பவன் சின்னவன் பாலன் என்பவனைத் துப்பாக்கியாற் சுட்டுக் கொலைசெய்ய முயற்சிகதான் என்று குற்றஞ் சாட்டப்பட்ட வழக்கு யாழ்ப்பாணம் சுப்பிறீம்கோட்டில் நீதியரசர் சேர் பிரான்சிஸ் சூட்ஸ் முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக்கொள்ளப்பட்டது.

விசாரணையில் எதிரி தான் திடீரென்று ஏற்பட்ட மனக் கிளர்ச்சியினால் அப்படிக் குற்றத்தைச் செய்தேன் என்று குற்றத்தை ஒப்புக்கொண்டதன் பேரில் நீதியரசர் அவனுக்கு ஒருமாதச் சிறைத் தண்டனை விதித்தார்,

O

சண்டிருப்பாய், நல்லான் வயிரமுத்தன் என்பவனைக் கொலைசெய்ததாக, விநாசித்தம்பி பொன்னம்பலம் என்பவர் குற்றஞ் சாட்டப்பட்ட வழககில், எதிரிக்கு 750 ரூபா அபராதமும் 3 மாதச் சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது அபராதஞ் செலுத்தப்படின், இறந்த நல்லான் வயித்தியின் விதவைக்கு ரூபா 450 கொடுக்கப்படல்வேண்டும் என்றும் அபராதப் பணம் கொடுக்காவிட்டால் அதன்பொருட்டு மூன்று மாதம் மேலதிகமாகச் சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டுமென்றும் தீர்ப்புக் கூறப்பட்டது.

### உயர்தர நீதிமன்றம்

உயர்தர நீதிமன்றத்து நீதிபதிகளில் ஒருவராயிருக்கும் மிஸ்ரர் கேனன் இன்னும் சில தினங்களில் இளைப்பாறுவர். அவருடைய இடத்துக்கு, நீதியரசர் ஸி. நாகலிங்கம் நிரந்தரமாக நியமிக்கப்படுவர்.

## யர்ழ்ப்பாணம் பொது மயானம்

யாழ்ப்பாணம் நகரசபை எல்லைக்குள், ஆராலி ரேட்டில் சகலர்க்கும் பொதுவான ஓர் மயானத்தை அமைப்பதற்காக, நகரசங்கம் ஓர் துண்டு நிலத்தைவாங்க உத்தேசித்திருந்தது. ஆனால் அந்த நிலச் சொந்தக்காரர் தாம் அதனை விற்கமுடியாதென்று இப்போது கூறுவதால், அரசாங்கத்தின்மூலம் நகரசங்கத்துக்குக் கட்டாயமாகப் பெற்றுக்கொள்வதற்கு ஒழுங்குகள் செய்யப்படுகின்றன.

## அகில இலங்கைச் சைவ மகாநாடு

அகில இலங்கைச் சைவ இளைஞர் மத்தியமகாசபையின் ஆதரவில் சர்வசித்து வருஷம் சித்திரைமாதம் 5, 6, 7 (18,19 20-4-47, ம் நாட்களில் கோயமுத்தூர் சிவக்கவிமணி C. K. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் தலைமையில் ஒரு அகில இலங்கைச் சைவமகாநாடு யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரித் தமிழ் வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெறும். கோயமுத்தூர் ராவ்பகதூர் C. M. இராமச்சந்திரன் செட்டியார் அவர்களும் இலங்கையில் உள்ள சைவப் பெரியார்களும் ஷை மகாநாட்டிற் பிரசங்கஞ் செய்வார்கள். ராவ்பகதூர் C. M. இராமச்சந்திரன் செட்டியார் அவர்கள் சைவ ஸ்தாபனங்களில் சைவம், தமிழ் சம்பந்தமாகப் பிரசாரஞ் செய்ய இயைந்துள்ளார். அவரைக் கொண்டு பிறஇடங்களில் பிரசங்கஞ் செய்விக்க விரும்புவோர் விடயத்தை முன்னதாகவே எழுதி அறிவித்தால் ஒழுங்கு செய்யலாம் என்று அகில இலங்கைச் சைவமகாநாட்டு உபகாரியதரிசி தெரிவிக்கின்றார்.

## மத்திய மாகாணச் சைவமகாசபை

ஷை மகாசபையின் 21வது வருஷநிறைவு விழா நிகழும் வியவருஷம் பங்குனி மாசம் 2-ம் திகதி (15-3-47) சனிக்கிழமை 3 ந் திகதி (16-3-47, ஞாயிற்றுக்கிழமை ஆகிய இருநாட்களிலும் மேற்படி சபை மண்டபத்தில் இராசவாசல் முதலியார் நா. கனகநாயகம் J. P. அவர்கள் தலைமையில் நடைபெறும்.

## திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

**சனி மார்ச் 15**

காலை 7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 ஆர் நடராஜன் வயலின் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8.15 எஸ். சைலப்ப ஓதுவார் பாட்டு 8-30 காலை இசை 9 முடிவு.

1 ஆர் நடராஜன் வயலின் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 சர்வகலாசாலைகளுக்கு 2 தமிழில் செய்திகள் 2.05 சர்வகலாசாலைக் குறிப்பு 2-15 எஸ் சைலப்ப ஓதுவார் பாட்டு 2-45 முடிவு

5 கும்பகோணம் ஏ டி சுல்தான் பாட்டு 5.40 அற்புதத் திருவந்தாதி விளக்கம் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 கும்பகோணம் ஏ டி சுல்தான் பாட்டு 7-15 நாணய மதிப்பு 7-30 தமிழில் செய்திகள் 7-45 குன்னக்குடி வெங்கடராமையர் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 வயலின், பியானோ தபலா 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை 9 45 தர்க்கப் பாட்டுகள் 10 இசைவேளை 10-30 முடிவு.

**ஞாயிறு மார்ச் 16**

காலை 7 15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 ஆர் நாராயணசாமி பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 காலை இசை இசைத்தட்டு 8-30 ஏ ருக்மிணி வீணை 9 முடிவு

12.20 தபால்மூலம் தேசப்பயிற்சி 12.40 முதல் பிறை 12-45 நழுவிய சந்தர்ப்பம் நாடகம் 12 55 திடுக்கிடும் சம்பவம் 1 மணிமலர் 1-30 ஆங்கிலத்திதில் செய்திகள் 1-40 பியானோ கிளாரினெட் 2 தமிழில் செய்திகள் 2.05 பெண்ணுலகம் 2-30 நீங்கள் கேட்டவை 3 முடிவு

மாலை 5 அம்பூர் அம்ருதவல்லி, சுந்தரவல்லி பாட்டு 5.40 தேவாரா தளை 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 ஏ ருக்மிணி வீணை 7-30 தமிழில் செய்திகள் 7-45 நமது தபால்பெட்டி 8 ஆர் நாராயணசாமி பாட்டு 8-30 அம்பூர் அம்ருதவல்லி சுந்தரவல்லி பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 ரேடியோ நாடகஇசை 9-30 லண்டனிலுருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் 9 45 இருவயலின்கள் 10 இசைவேளை 10.30 முடிவு.

**திங்கள் மார்ச் 17**

காலை 7-15 கீதாரம்பம் 7.20 தமிழில் சேய்திகள் 7-30 திருச்சேறை எஸ சிவசுப்பிரமணியபிள்ளை நாகஸ்வரம் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 புதிய பாடல்கள் 8 30 கே தங்கம்மா பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் இசைத்தட்டு 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 கே தங்கம்மா பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 கே தங்கம்மா பாட்டு 2.15 கல்வி ஒலிபரப்பு 2-45 முடிவு.

மாலை 5 திருச்சேறை எஸ் சிவசுப்பிரமணியம்பிள்ளை நாகஸ்வரம் 5-40 இசைப் பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6.15 கிராம நிகழ்ச்சிகள் 7 எம் எஸ் மோகனும்பாம்பாள் பாட்டு 7-30 தமிழில் செய்திகள் 7-45 தொண்டுக்கலை 8 எம் எஸ் மோகனும்பாள் பாட்டு 8-30 இசைக்கதம்பம் 8-55 இசைவேளை 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 குரல்வகை 8 30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9 45 புல்லாங்குழல் 10 இசைவேளை 10-30 முடிவு.

**செவ்வாய் மார்ச் 18**

715 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 டி சுப்பிரமணியதேசிகர் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 காலை இசை 8-30 வி ஆர் ரங்கநாதன் புல்லாங்குழல் 9 முடிவு.

1 கதமபம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1.40 வீ ஆர் ரங்கநாதன் புல்லாங்குழல் 2 தமிழில் செய்திகள் 2-05 வி ஆர் ரங்கநாதன் புல்லாங்குழல் 2.15 கல்விஒலிபரப்பு 2-45 முடிவு

மாலை 5 டி சுப்பிரமணிய தேசிகர் பாட்டு 5-40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 தாளவாத்யக் கச்சேரி 7-15 மேலவன் 7-30 தமிழில் செய்திகள் 7-45 டி கே ரங்காச்சாரி பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 என் வி துரைக்கண்ணு நாகஸ்வரம் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9-45 ஜே எம் அப்துல்கனி 10 நீங்கள் கேட்டவை 10-30 முடிவு.

## பெயர் மாற்றம்

வல்வெட்டித்துறை வல்வெட்டி வாசி முருகர்சின்னையா ஆகியநான்எனதுபெயர் மாற்றத்தைக்குறித்து 4—7-3-47 இந்துசாதன வெளியீடுகளில் கொடுத்த அறிவித்தல் தவறான தென்றும், முருகர் சின்னையா என இதுகாறும் அழைக்கப்பட்டும் அங்ஙனமே சகல சாதனங்களிலும் கையொப்பமிட்டுவந்தேன் என்றும், பிறப்புப் பதிவில் முருகர் முத்தையன் எனப் பதியப்பட்டிருந்த தென்றும், இனிமேலும் முருகர் சின்னையா என அழைக்கப்படுவேன் என்றும், அங்ஙனமே கையொப்பமிடுவேன் என்றும் அறியத்தருகிறேன்.

இங்ஙனம்,
மு. சின்னையா.

வல்வெட்டி,
வல்வெட்டித்துறை,
10—3—47
Mis 339, 14—3—47.

## தேவை

அநுராதபுரம் விவேகானந்த வித்தியாலயத்துக்கு

1 ஆங்கிலம் படிப்பிப்பதற்கு எஸ். எஸ். ஸி, தராதரப் பத்திரத்துடன், பயிற்றப்பட்ட இரண்டாம் தராதரப் பத்திரமுடைய ஓர் ஆசிரியர்.

(இதற்கு மேற்பட்ட தராதரமுடையவர்களும் மநுச்செய்துகொள்ளலாம்)

2 பயிற்றப்பட்ட இரண்டாம் தராதரப் பத்திரமுடைய ஓர் பெண் ஆசிரியை.

சங்கீத அறிவு உடையவர் விசேஷமாகக் கவனிக்கப்படுவர்.

18—11—47 க்கு முன் பின்வருவோர்க்கு மனுச்செய்க.

M சிவராமலிங்கம்
பொதுக்காரியதரிசி
அநுராதபுரம் விவேகானந்தசபை
352 14—2—47

## அ. இ. சைவசமயப்பாடப் பரீட்சை

கொழும்பு விவேகானந்த சபையாரால் நடாத்தப்பட்டு வரும் அகில இலங்கைச் சைவசமயப்பாடப் பரீட்சை இவ்வருடம் பங்குனி மாதம் 23-ந் தேதி சனிக்கிழமை (5-4-47) காலை 9 மணி தொடக்கம் நடைபெறுமென அறிகிறோம்.

### மகாசங்காபிஷேகம்

நிகழும் வியவருஷம் பங்குனி மாசம் கஅ (31-3-47, திங்கட்கிழமை பகல் தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி சுப்பிரமணிய சுவாமிக்கு மகாசங்காபிஷேகமும், அன்றிரவு விசேஷ உற்சவமும் நடைபெறும்.


விலாச மாற்றம்.

**சாதாரண அறிவுப் போட்டி**

அன்பர்களுக்கோர் விசேஷ அறிக்கை

தபால் வசதியின்மையாலும் பட்டினக்கரையற்றதாலும் இன்னும் பல வசதிகளை முன்னிட்டும் இனிமேல் சாதாரண அறிவுப் போட்டிக் காரியாலயம்
No. 58 Bazaar Street, Chilaw
என்ற விலாசத்துக்கு மாற்றப்பட்டிருக்கிறது

— போட்டி ஆசிரியர் —

Mis 350 14—18-3-47


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகம்பலவிதக் கதை

2-ம் பக்கத் தொடர்ச்சி

யினுற்ருன், தம்பி, மற்றைச் சாதியாரும் நெறி திறம்பவேண்டி நேரிட்டதென்று நாம் நினைக்கிருேம்" என்ருர் புரோகிதர்.

### "வையந்தோறுந் தெய்வந்தொழு"

பின்னரும் புரோகிதர் விஜயரத்தினத்தைப் பார்த்து "தம்பி, தாழ்ந்த சாதியார் தங்களுக்கென விதிக்கப்பட்ட தானத்தில் நின்று தெய்வத்தை வணங்குவதை விட்டு, இந்தியாவிலே அவர்கள் கோயிலுக்குட் போய் வணங்கத் தலைப்பட்டிருக்கிருர்களெனவும், காலத்திற்குத் தக்கபடி அப்படிச் செய்ய வேண்டுமெனவுங் கருத்துப்படச் சொன்னீர்; அங்கே அவர்கள் அப்படி உட்சென்று வணங்குதற்குப் பல காரணங்களுண்டென்றும் அறிகிருேம்; ஆனுல் ஒன்றை நாம் அவதானித்துக் கொள்ளல் வேண்டும்; தீண்டுஞ் சாதியாரென்றுந் தீண்டாச் சாதியாரென்றும் மனிதன்ருன் வகுத்து வைத்தானென்று வைத்துக் கொள்ளுவோம்; இந்தியாவிலே பிராமணரும் மற்றைச் சாதியினரும் ஊடாடும் முறைகளைப்பற்றி நாம் அறியோம்; எங்கள் நாட்டிலே ஒவ்வொரு சாதியாரும் மற்றைச் சாதியாரோடு தீண்டி ஊடாடவேண்டுமென்ற நியதியில்லை; நாம் பிராமணன், நீர் வேளாளன், எம்மைத் தீண்டவேண்டுமென்ற விருப்பம் உமக்கில்லை; உம்மைத் தீண்டவேண்டுமென்ற விருப்பம் எமக்குமில்லை; இதனுல் நாங்களிருவருந் தீண்டாச் சாதியினராவோமா? மேலான சாதியினரென்று சொல்லப்படும் பிராமணர்களாகிய நாங்களும் கோயிலுக்குள் எந்தக் காலத்தும் எந்த இடத்திலும் போய் நின்று வணங்குதற்கு எங்களுக் கதிகாரமில்லையே; பரார்த்தபூசையைச் செய்தற்குரிய ஆதி சைவப்பிராமணனுகவிருந்தாலும், தனக்குரிய ஆசார ஒழுக்கத்தோடுங் குருத்துவத்தோடும் கூடியவனுய் ஆன்மார்த்த பூசை முதலியன செய்பவனுய் அங்கக்குறைவு எவையுமின்றி ஆசாரியருக்குரிய இலக்கணங்களெல்லாம் அமைந்தவனுயிருந்தால், அவனே சிவலிங்கத் திருமேனியைத் தீண்டி அபிஷேகஞ் செய்தற்கும், அலங்காரஞ் செய்தற்கும், அர்ச்சனை செய்தற்கும் உரியவனென்று தமிழிலுள்ள சைவசமய நெறி முதலிய நூல்களிற் சொல்லப்பட்டிருத்தலை நீரும் படித்துப் பார்க்கலாம்; கோயிலிற் போய்த் தெய்வத்தை வழிபடும் விஷயத்திலே பிராமணனுயிருந்தாலென்ன வேளாளர் முதலிய ஏனைய சாதியினராயிருந்தாலென்ன, தம்பமண்டபத்திற்கு இப்பால் நின்று கும்பிடவேண்டுமென்று தானே சொல்லப்பட்டிருக்கிறது; மேலும் ஆசாரமில்லாமலும் ஆசௌசத்தோடும் பிராமணனுக வேளாளனுக ஏனைய சாதியினராகத் திருக்கோயிலுட் பிரவேசிக்கவொண்ணுதென்ற கட்டுப்பாடிருக்கிறதல்லவா?

### "தாழ்ந்தவருணத் துதித்தோரும் தக்கோராவர் ஒழுக்கத்தால்"

நாம் எங்கள் இல்லங்களில் ஸ்நானமின்றியும், தோய்த்துலர்ந்த வஸ்திரந் தரியாமலும் சஞ்சரிப்போம்; ஆனுல் கோயிலுக்குப் போவதென்ருல், ஆசாரசீலராயல்லாமல் திருக்கோயிலின் உட்பிரகாரத்திற்ருனும் புகமாட்டோம்; ஸ்நானம் முதலியன முடித்துக்கொண்டுதானே போகிருேம்: காரணமென்ன? எங்கள் இல்லங்களைக் காட்டிலும் வித்தியாசாலைகள் மடங்கள் இன்னும் பொதுவான தாபனங்கள் எவைகளைக் காட்டிலும் திருக்கோயில் பரிசுத்தமான இடமென்றதனுற்ருனே; இந்தியாவிலே தீண்டாச் சாதியினரென்று சொல்லப்படுவோரைக் கோயிலுட் போங்கள் என்று தூண்டிநிற்கும் தீண்டுஞ் சாதியினரென்றிருப்போர் தங்கள் வீடுகளில் அவர்களை எங்கும் புக இடங்கொடுப்பார்களா? மனஞ் சம்மதிப்பார்களா? அவர்களை ஒருபோது தாங்கள் தீண்டினுலும், தங்கள் மனைவி மக்களைத் தீண்டவிடுவார்களா? பொதுவான இடங்களிலுள்ள தருமக் கிணறுகளிலே தாழ்ந்த சாதியாரும் தண்ணீர் அள்ளிக் குடிக்கலாமென்று சொல்லுகிற அவர்கள் தங்கள் தங்கள் வீடுவளவுகளிலுள்ள கிணறுகளில் அவர்களைத் தண்ணீரள்ள விடுவார்களா? இந்தியாவிலேயுள்ளவர்கள் அரசியல் விஷயமாகத் தாம் மேற்படுவதற்காக அப்படிக் காரணங்காட்டித் தம் தம் வருணச்சிரதருமத்தின்படி ஒழுகும் இந்து ஏழை மக்களைத் தூண்டிவிடுகிருர்களேயொழிய, அந்தத் தாழ்ந்த வருணத்தார் கோயிலுட் பிரவேசித்துத் தெய்வத் திருமேனிகட்குச் சமீபமாகப்போய் வரங்கேட்டுப் பெற்று மறுமையில் முத்தியையும் பெறட்டும் என்ற கருணையினுல் இந்த விபரீதங்களை ஆக்கிவிடுகிருர்களா? இந்திய தேசீயவாதிகள் அந்நாட்டிலுள்ள தீண்டாதார் விஷயமாகச் சொல்லுவதுஞ் செய்வதும், வெள்ளாடு நனைகின்றதென்று வேங்கை விம்மியழுதவாறல்லவா? அந்தத் தீண்டாதாரை அத்தேசீயவாதிகள் நன்னிலைப்படுத்த விரும்பினுல் அவர்களுக்குப் போதிய கல்வியூட்டி மது மாமிசம் முதலியன உண்ணுமற் செய்து நல்லொழுக்கங்களைக் கடைப்பிடித் தொழுகப் பயிற்றி அவர்களையும் தக்கோர்களாக்கிவிடலாமே? 'தாழ்ந்தவருணத் துதித்தோரும் தக்கோராவர் ஒழுக்கத்தால்" என்று தமிழ் நூல்களிற் கூறப்பட்டிருக்கிறதே; தக்கோரானுல் அவரை ஆலயத்துட் பிரவேசிக்கவொண்ணுதென எவருந் தடுத்தல் முடியாதே?..." என்று புரோகிதர் சொல்வதற்கிடையில், விஜயரத்தினம் அவரைப் பார்த்து "சாமீ, வேளாளர் முதலிய உயர்ந்த சாதியினரென்று தங்களைச் சொல்லிக்கொண்டு, தாழ்ந்த சாதியாரென்றிருப்போருட் பலர் செய்யும் கருமங்களாகிய மற்சமாமிசம் புசித்தல் மதுபானஞ் செய்தல் ஆசௌசங்காக்காமை முதலாந்தவறுகளைச் செய்கிருர்களே, அப்படிப்பட்டவர்களுங் கோயிலுக்குப் போகிருர்களே, அவர்கள் போகலாமென்ருல் இவர்கள் ஏன் போகக்கூடாது? இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லுங்கள்" எனலும், ஐயர் "தம்பி, நீர் கேட்ட கேள்வி நியாயமானது? இந்தக்கேள்வியை இக்காலத்தில் எம்மிடம் பலர் கேட்கிருர்கள்; இதற்கு நியாயஞ் சொல்வதும் இலகுவல்ல; நாம் இந்த விஷயமாகச் சிந்தித்துப்பார்த்தோம் ஒரு காரணம் மாத்திரஞ் சொல்லலாம்; உயர்ந்த சாதியாருக்குள் மற்சமாமிசம் புசிப்போர் மதுபானஞ் செய்வோர் ஆசார ஒழுக்கமில்லாதவர்கள் கோயிலுக்குட் போகக்கூடாதென்று சிவாலயதரிசனவிதி முதலிய நூல்களிற் சொல்லப்பட்டிருக்கிறது; தான் உயர்குலத்தைச் சேர்ந்தவனென்று தன்னை மதித்துக் கொண்டிருக்குமொருவன், மேலே சொல்லப்பட்டவிதமாக ஆசாரமில்லாமற் கோயிலுக்குட் போகும்போது, அங்கு நிற்கும் ஆசார ஒழுக்கத்தோடுகூடிய ஒருஅன்பன் அவனை நோக்கி "நீர் இப்படி ஆசாரமில்லாமற் கோயிலுக்குட் புகலாகுமா" என்று கேட்கிருனென வைத்துக் கொள்ளுவோம்; கேட்கப்பட்டவன் பிராமணனுயிருந்தால் என்ன பதில் சொல்லுவான் தெரியுமா? "நான் பிரமகுலத்தவன், என் தமயனுர் தாம் இங்கே உற்சவாசாரியராய் வந்து கடமை பார்க்கிருர்: அவர் உற்சவாசாரியராய்க் கடமை பார்க்கலாம் அவருடைய தம்பி நான் மாத்திரம் கோயிலுக்குப் போகவுங் கூடாதா? என்னுடைய ஒழுக்கம் ஒழுக்கவீனத்தைப்பற்றி நீ எப்படி அறிவாய்" என்று தன் சாதிஉயர்ச்சியைச் சொல்லி உரிமை பாராட்டுகிருனேயொழிய, தன் தீய ஒழுக்கத்தைப் பற்றி யாதும் பேசமாட்டான்; மேலும் அத்தீயவொழுக்கத்தை மறைக்கவே முயலுகிருன்; இப்படியே வேளாளர் முதலிய சாதியினருள்ளும் ஒழுக்கங்கெட்டவர்கள் சமாதானஞ் சொல்லத் தலைப்பட்டுக் கொண்டார்கள் தம்பி, சாதிசமயக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டதாகிய பூர்வகாலத்திலே அந்தணர் அரசர் வணிகர் வேளாளர் முதலாம் வருணத்தார்கள் தூயவுணவுண்போராய் ஒழுக்கமுடையவர்களாய்க் கல்வியறிவு முதலியவற்றில் மேம்பட்டவர்களாய் ஆசார சீலராய் இருந்தமையினுல், அவர்கள் ஆலயங்களிலே குறித்த குறித்த தானங்கள் மண்டபங்கள் வீதிகளிற் புகுதற்காகிய உருமையை முன்னேர் அளித்திருந்தார்கள்; தாழ்ந்த வருணத்தவரெனப்படுவோர் அக்காலத்திலே பெரும்பான்மையும் மற்சமாமிசம் புசிப்பவர்களாய் ஆசாரமற்றவர்களாய் சில குறைவான தொழில்களையும் செய்ய நேர்ந்தமையினுல் அவர்களைக் கோயிலின் புறத்தே நின்று கும்பிடவேண்டுமென விதித்து, திருவிழாக்காலங்களிலே அவர்கள் இறைவனை நெஞ்சார நினைக்கவும் கண்ணுரத் தரிசிக்கவும் கையாரக் கும்பிடவும் வாயார வாழ்த்தவும் ஒழுங்கு செய்திருக்கிருர்கள்.

### ஞானிக்கில்லை இன்பமுந் துன்பமும்

இப்பொழுதும்காசிகதிர்காமம்முதலிய சிலஆலயங்களிலே அவர்களெல்லாரும் மற்றையோருடன் கலந்து சுவாமியைத்தரிசனஞ்செய்தற்காகிய ஒழுங்குகள்உண்டு தாழ்ந்தவரென்று சொல்லப்படும் வருணத்தாருள்ளும் பலர் இந்நாட்டிலே தங்கள் பொறுப்பில் ஆலயங்களை நிர்வகித்து இறைவனைத்தங்கள்விருப்பப்படி வழிபடுகிருர்கள்; இனி, தாழ்ந்த சாதியிலுள்ள ஒருவர் ஆசார ஒழுக்கமுடையவராயிருப்பதைப் பார்த்து அவரை மாத்திரம் ஆலயத்துட் பிரவேசிக்க விடுத்தால், அவருடைய தம்பியாயுள்ளவன் மகனுயுள்ளவன் ஆசார ஒழுக்கமில்லாதவனுயினும், "அண்ணன் கோயிலுக்குட்போகலாம், அப்பர் கோயிலுக்குட்போகலாம் நான் மாத்திரம் போகவொண்ணுதா என்று நியாயம் பேசுவானேயொழிய, "அண்ணன்" "அப்பர்" ஆசார ஒழுக்கத்தோடு கூடியதாற் கோயிலுக்குட் போகிருர்கள், நானும் அப்படியொழுக்கமாக நடந்தாற் போகலாந்தானேயென்று ஒருபோதும் எண்ணமாட்டான்; இதனுற்ருன் முன்னேர் அவ்விதமான கட்டுப்பாடுகளைச்செய்தனர்போலும்; ஆலயவழிபாட்டில் இந்துக்கள் மாத்திரமல்லர், ஏனைய சமயவாதிகளும் தங்கள் தங்கள் ஆலயங்களுட் சென்று ஒருசாரார் வணங்கலாமெனவும் ஒருசாரார் அக் கோயிலில் வணங்கக்கூடாது, அவர்களுக்கென அமைக்கப்பட்ட வேறு கோயிலிற் போய் வணங்கவேண்டுமெனவும் பேதம் பாராட்டுகிருர்கள்; தம்பி, அவைகளையெல்லாம் இங்கே எடுத்து விரிக்கிற் பெருகும்: இந்துக்களுள் ஞானமார்க்கத்தை யநுட்டித்து வருபவர்க்குச் சாதிக்கட்டுப்பாடுமில்லை; வேறு எவ்வகையான கட்டுப்பாடுமில்லை "ஞானிக்கில்லை இன்பமுந் துன்பமும்" என்றும், எக்குடிப் பிறக்கினும் யாவரேயாயினும் அக்குடிக்கற்றோரை மேல்வருகென்பர்" என்றும், கீழ்ப்பிறந்தாராயினும் கல்லாதார் மேற்பிறந்துங் - கற்றுணைத் திலர்பாடு" என்றும் பெரியோர் கூறியுள்ளார்; திருவள்ளுவர், திருமூலர் முதலான பெரியோர் இதற்குச்சான்ருக இன்றும் விளங்குகின்றனர். அல்லாமலும் இறைவனை வணங்கப் புகுவோர், அவனருளாலே அவன் தாள் வணங்கி என்ற பிரகாரம் பெரியோர் விதித்த கொள்கைகளின்படி பயபக்தியோடு அகமும் புறமுந் தூயராய் வணங்கினுல் அவனருளைப் பெறலாகும்; அதனைவிடுத்து நான் எனது என்னும் அகங்கார மமகார முனைப்போடு கோயிலுட் புகுந்து தெய்வத் திருமேனியைத் தீண்டி வணங்கினுலும் அதனுல் நன்மையில்லை: அச்செயல் குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசிக் கொள்ளலாகும்; தம்பி, எங்கள் அப்பன் "நினைப்பவர் மனம் கோயிலாக் கொண்டவன்"; அப்படிப்பட்ட அப்பனைக் கோயிலுக்குள்ளேதான் போய் வணங்கவேண்டும் புறத்தே நின்று வணங்குவதாற் பயனில்லை என்று நினைப்பதும பிரசாரஞ் செய்வதும் அவனருள் அணுவளவும் பெருதவர்களுடைய கொள்கையாகும்; இதுவே எமது நம்பிக்கை; இவைகிடக்க, நாம வருகிற வெள்ளிக்கிழமைக்கிடையில் விநாயகமூர்த்தி வீட்டிற்கு நீர் சொன்னவிஷயமாகப் போய்ப் பேசவேண்டியவற்றைப்பேசி ஆகவேண்டியவற்றைப் பார்ப்போம்" என்றுபுரோகிதர்சொல்லி விஜயரத்தினத்திடம் விடைபெற்றுமீண்டார்.

—வரும்

# கலைக்கப்பட்டு விடுமா?

## இந்திய இடைக்கால அரசாங்க நிலைமை

இப்போது இந்தியாவில் உள்ள இடைக்கால அரசாங்கம் மவுன்ற்பேற்றன்பிரபு இராஜப்பிரதிநிதியாகக் கடமை ஏற்றதும் கலைக்கப்பட்டுவிடுமா? கலைக்கப்பட்டுப் புதிய ஓர் மந்திரசபை ஜனநாயக முறையைத் தழுவி அமைக்கப்படலாம் என்று யூனைற்றெட் பிரஸ் செய்தி ஸ்தாபனம் கூறுகிறது; இப்போதுள்ள இடைக்கால அரசாங்கம் முஸ்லீப்கள், ஹிந்துக்கள், சிறுபான்மையினர் என்பவர்களின் பிரதிநிதித்துவ ஸதாபனமாக இருக்கின்றதுஎன்பது உண்மை. ஆனுல் அது கூட்டுப் பொறுப்பின்றி, அவ்வரசாங்கத்திலுள்ள சிலர், தம மனம் போனபடி கருமம் ஆற்றிவருவது கண்கூடு. இந்தக் கேவல முறையை ஒழிப்பதே மவுன்ற்பேற்றன்பிரபுவின் முதல் வேலையாக இருக்கும் என்றும், முதலில் அவர் இந்த அரசாங்கத்தைக்கலைத்துவிட்டு பின் இதே அங்கத்தவர்களைக்கொண்டே ஓர் அரசாங்கத்தை அமைப்பார் என்றும் கூறப்படுகிறது. ஆனுல் முஸ்லிம்லீக்கில் உள்ள அங்கத்தவர்கள், அரசியல் நிர்மாணசபையில் சேர்ந்து அச்சபையின் ஆலோசனைகளிற் கலந்து பங்குபற்ற வாக்களித்தால்தான் அவர்கள் அரசாங்கத்திற் சேர்க்கப்படுவர் என்று தெரிகிறது. அப்படி அரசியல் நிர்மாணசபையிற் சேராத பட்சத்தில், இடைக்கால அரசாங்கத்தில் அவர்களுக்கு வேலையில்லைஎன்று மவுன்ற்பேற்றன் பிரபு கண்டிப்பாகக் கூறக்கூடும்.

மவுன்ற்பேற்றன் பிரபு கடமையேற்றதும், மாகாணத் தேசாதிபதிகளைக் கொண்ட ஓர் மகாநாட்டைக் கூட்டி, தேசநிலைமையை ஆராய்வார் என்றும், அதன்பின்னரேயே அவர் தமது வேலைத்திட்டத்தை நடத்திவைப்பார் என்றும் யூனைற்றெட் பிரஸ் செய்தி ஸ்தாபனம் மேலும் கூறுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவ வழிபாடு

(பிரமஸ்ரீ இ. ஞானசேகரக் குருக்கள்)

(முற்றொடர்)

தாதமார்க்கஞ் சாற்றிற் சங்கரன்றன் கோயிற் றலமலகிட்டிலகு திருமெழுக்குஞ் சாத்திப் போதுகளுங் கொய்து புகுந்தார்மாலை கண்ணிப் புனிதற்குப் பலசமைத்துப் புகழ்ந்து பாடித் தீதிறு விளக்கிட்டுத் திருநந்தவனமுஞ் செய்து திருவேடங் கண்டால் அடியேன் செய்வதியாது பணியீரென்று பணிக்கவர்தம் பணியுமியற்றுவதேஇச்சரியையியற்றினோர் சிவனுலகி விருப்பார்தாமே.

இவ்வாறுகிய சிவ வழிபாடாகும். சரியையைச் செய்தோர் சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் சிவலோகத்தில் வாழ்ந்திருத்தலாகியசாலோக பதவியைப் பெறுவார்களெனச் சிவாகமாதிநூல்கள் கூறுகின்றன. இவைகளினுண்மையை எங்கள் சரீரங்களிலும் அறியக்கூடும், இதனுண்மையாவது தேகத்தினிடமாகப் பொருந்தி அழிவில்லாமற் கிடக்கும் காமம், வெகுளி, பொய் என்னுங் குப்பைகளையும் தொண்ணூற்றாறு தத்துவங்கள் என்னுங் குப்பைகளையுங் களைந்து நீக்கிப் பரிசுத்தமாய் விளக்கவே திருவலகிடல் எனக் குறிக்கப்பாற்று இது செய்தோர் உடனே சிவகதி அடையத் தடையுமுண்டோ? திருக்கழுமல மும்மணிக்கோவை,

கருமுதற்றொடங்கிப்பெருநாளெல்லாங் காமம், வெகுளி கழிபெரும் பொய்யெனுந் தூய்மையில் குப்பை தொலையின்றிக் கிடந்ததை அரிதினக் கழிந்து போக்கி.

இலித் திருமெழுக்கிடல், இதனுண்மையாவது கோமய முதலிய சேத்தைகளை ஒருங்கே நீக்கி வினைகடந்த தத்துவ ஞானமென்னும் நறும்சாணத்தைக்கொண்டு அன்பென்னுஞ் சலத்தோடு கலந்து மெழுகினற்றன் மனலயத்திற் சிவம் தோற்றம்பெற்று முத்தியடைவார்கள். (சிவப்பிரகாச சுவாமிகள்)

"சினமுதலியமயநீமரற்றபுவினைதபு வாய்மையா மெழுக்கை யன்பெனும் புனலொடு விரவியே பூசினல்லது மனமெனு மனையிடை வராதி லிங்கமே."

திருவிளக்கிடல் — விதானங் கட்டல் இவைகளினுண்மையாவது தேகத்திலே மனமென்னுந் தகழியில் அறிவாகிய நெய்யை நிறைத்து உயிரென்னுங் காற்றை நிறுத்தி ஆணவத்தன்பமென்னும் இருணீங்கச் சிவஞானமென்னுந் தூண்டா விளக்கை ஏற்றினோர்களும் சத்தியம் என்னும் மேற்கட்டி கட்டினவர்களுமே மோட்சம் அடைவார்களெனத் தெளியுந் தன்மையவாம். தேவாரம்.

உடம்பெனு மனையகத்து ளுள்ளமே தகழியாக மடம்படுநெயயட்டியுயிரெனுந் திரிமயக்கி, யிடம்படு ஞானத்தியாலெரிகொள விருந்துநோக்கிற, கடம்பமர் காலைதாதைகழலடி காணலாமே.

பிரதட்சிணம் என்பதின் உண்மையாவது சுவவியாபகம் ஆன்மாவில் விளங்குதல் காரணமாகச் செய்யப்படுவதேயாம்.

நமஸ்காரமென்பது தற்போதம் என்னும் அதிகாரத்தை நடாத்தும் பிரம விட்டுணுக்களாலே சூக்கும ஞானக் கிரியைகளை நீங்கிப் பரமபதியாகிய சிவபெருமானது அடிமையாய் அவருடன் அத்துவிதமுற்று நின்ற நிலைக்குறிப்பாம். சரியை கிரியையாளர் சிவத்தைப் பகிர்முக வடிவத்திற் கண்டு வணங்குவர். யோகிகள் இதய கமலத்திற் காண்பார்கள். மெய்ப் பொருளுணர்ந்த ஞானியர்கள் எங்குஞ் சிவமாகக் கண்டானந்த முறுவார்கள். இதனை "நண்ணும் அநந்தந் தவத்தால் அருள்ஞானம் கனந்தம் விழியென்றறி" என வருவதனானு முணர்க. இன்னுமோருண்மையைக் கூறுவாம்.

துவாதசாந்தத் தலமாகிய மதுராபுரியின்கட்தோன்றிய அரசரேருன வரகுணபாண்டியன், பிரமகத்தியாற் பீடிக்கப்பட்டுவருந்தி அதை நீக்குதற்கு அந்தணாளர்க்குவேண்டியனாந்தும் திரிமூர்த்தி வடிவமான அரச விருட்சத்தைப் பிரதட்சினம் செய்தும், பசுக்களுக்குப் புல் முதலாயின அருத்தியும், உண்டவர்க்கு முறையே செல்வம், நோய் நீக்கம், சத்துரு நாசம், புத்திரப்பேறு, யாவராலும் பூசிக்குமேன்மை என்னுமிவைகளைக் கொடுக்கின்ற கோசலம், கோமயம் பால் தயிர், நெய் என்னுமிவைகளையுண்டும பின்னரும் பற்பல புண்ணியங்களைச் செய்தும் நீங்கப்பெறுமல், இறுதியில் ஆலயப் பிரதட்சிணஞ் செய்ததினாலன்றோ தன் தீராநோய் நீங்கப்பெற்றனரென்பதாம்.

## அன்பு நெறிச் செல்வர்

(1ம் பக்கத் தொடர்ச்சி

ருர் என்றசெய்தி நாவரசர் திருச் செவிக்கு எட்டியது. "நந்தமை ஆளுடையவரை நாம் எதிர் சென்று இறைஞ்சுவது முந்தை வினைப்பயன்" என்று முகமலர அகமலர்வார். என்னே! இப் பெரியாருடைய பழுத்த உள்ளத்தின் உயர்ந்த நிலை! ஒருமே தக்க நண்பரோ பெரியாரோ நம்மைக்காண நாடி வருகிறுர் என்று அறிந்தாலும், அவரை எதிர்சென்று இறைஞ்சுவது முந்தை வினைப்பயன் என்று நாம் நினைக்கிறோமா? நினைத்தாலல்லவோ முகம்மலரும், அகமும் மலரும். நம்முடைய ஆணவத்தடிப்பையும், அப்பர் பெருமான் நிலையையும், தீவினையின் எல்லை நிலமாகவும் இருவினைகடந்த எல்லை நிலமாகவும் முறையே கருதவேண்டும். "எதிர் சென்று பணிவன் என எழுகின்ற பெருவிருப்பால்" நாவரசர் புறப்பட்டார். திருப்பூந்துருத்தியிலிருந்து ஞானசம்பந்தர் வரும் வழிநோக்கிச் சென்றுர். திருநீற்றுத்தொண்டர் குழாம் புடைசூழத் திருச்சின்னம் பணிமாறக் கேட்டார், நாற்றிசையுளளோர் பெருக்கும் ஆர்வத்தைக் கண்டார். பிள்ளையார்தமைச் சூழ்ந்த நெருக்கினிடை அவர் காணுவகை" நுழைந்தார். நிலத்தில்வீழ்ந்து பணிந்தார். உள்ளம் உருகினர்; எழுந்தார்; மனம பொங்கினர்; தொண்டர் குழாத்துடன் அணைந்தார்; "சந்த மணிச் சிவிகையினைத் தாங்குவாருடன் தாங்கிச் சிந்தை களிப்புற வந்தார்." —வரும்.

## கதாப்பிரசங்கம்

இம்மாதம் 3-3-47 திங்கட்கிழமை மாலை 6 மணியளவில் அளவெட்டி சைவ வாலிப சங்கத்தாரின் கூட்டமொன்று அளவெட்டி முதலியவேள் ஆலயத்தில் சங்கத் தலைவர் திரு அ. பொன்னுத்துரை அவர்கள் தலைமையில் நிகழலாயிற்று. தலைவர் முன்னுரையின் பின் வேலணையூர் பண்டிதர் திரு. மா. மாணிக்கம் அவர்கள் "இளையான்குடிமாற நாயனர்" என்னும் பொருள்பற்றி கதாப்பிரசங்கஞ் செய்தார். அளவெட்டி தமிழ்க் கலைமன்றத் துணையமைச்சர் பண்டிதர் க. காசலிங்கம் அவர்கள் குறிப்புரை கூறினர். சைவ வாலிப சங்கச் செயலாளன் அ. விஸ்வநாதன் அவர்கள் நன்றியுரை கூற கூட்டம் 10 மணியளவில் நிறைவுற்றது. —கடித

நல்ல செய்தி!

பொய்ப்பல், சுத்திசெய்தற்கு மிக உவந்த

**கெரேடன்ற்**

எனும் உயரிய தூள்

விலை: போத்தல் ஒன்று ரூபா 2—00

தனி ஏஜண்டுகள்

தி. ஒவர்ஸீஸ் கமேர்ஷியல் (சிலோன்) ஏஜென்ஸி லிமிற்றெட்
தபாற் பெட்டி: இல. 44
167. நோறிஸ்ரோட்
கொழும்பு

M. 338—7 25-3-47

**பசந்த லேகியம்**

இதனால் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கைகால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும், இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப்பலம் உண்டாக்கும்.

ஒருறாத்தல் விலை ரூபா 25
அரைறாத்தலுக்கு ரூபா 12-50
கால்றாத்தல் ரூபா 6-25

விலாசம்:

க. ஆறுமுகம்பிள்ளை
இ. 156, செக்கடித்தெரு கொழும்பு

Mis 25 23-4-46 to 22-3-47)

தந்தரோகசஞ்சீவி
கந்தசாமி வைத்தியர்

**சந்தனுதித் தயிலம்**

ஒரு கிழமைக்கு வைக்கக்கூடிய ஒரு அவுன்சு தயிலம் விலை ரூ. 2

ஒவ்வொருநாளும் ஒருசதவீதம் வைததுக் கடைசியற்று சீயாக்காய் வெந்தயம் அவித்துத் தட்பி வென்னீரில் தோய்வது. பத்தியம்: புகையிலையாகாது ஆடினபல்லு உடனே இறுகும், மூரசு வளரும், வாய்ப் புண் வீக்கம் தொண்டைப்புண் கம்மல் இருமல் கபாலம் பீனிசம் மாற்றும் உத்தரவாதமுடையது. ஒரு தடவை வேண்டிப் பாவித்து அறியலாம்.

நெருப்புச்சூடு முதல் எந்த வேக்காட்டிற்கும் பூச உடனே வேதனை தணியும்.

வீ. பீ. பீ. யிலும் அனுப்புவோம். சீசா முதலிய செலவு வேறு.

விலாசம்:

ஆயுள்வேத சிவசோதி
மெடிக்கல் ஹோல்
வல்வெட்டித்துறை.

வல்வை நரசிங்க வைரவாலயத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

Mis. 211 1.11-46—30-4-47 (வெ)

விளம்பரமின்றேல் பெரும் பணமில்லை

**இந்துசாதனம்**

ஆங்கில-தமிழ்ப் பிரசுரங்கள்

பத்திரக்கிரயம் (முற்பணமாக ஒருவருடத்திற்கு)

| | யாழ்ப்பாணப்பட்டின எல்லைக்குள். | வெளியூர். | மலாய்நாட்டுக்கு. |
|---|---|---|---|
| | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச |
| இந்துசாதனத் தமிழ்ப் பிரசுரம் | 6—50 | 9—50 | 10—50 |
| இந்துசாதன ஆங்கிலப் பிரசுரம் | 6—50 | 9—50 | 10—50 |
| இரு பிரசுரங்களுஞ் சேர்ந்து | 10—50 | 13—50 | 15—00 |

பத்திரக்கிரயம் முதலிய பண விஷயம் எதுவும், இந்துசாதன மானேஜருக்கே அனுப்பப்படல் வேண்டும்

மனேஜர், இந்துசாதனம், வண்ணார்பண்ணை.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West. Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai. Jaffna. on Friday, March, 14, 1947.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org